ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீவாநாசல மஹாமுநயே நம:

## <u>அஷ்டதிக்கஜஸிம்ஹாஸனாதிபதிகள் சிறப்பு</u>

பாராருமங்கை திருவேங்கடமுனி பட்டர்பிரான்
ஆராமம் சூழ்கோயில் கந்தாடை அண்ணண் எறும்பியப்பா
ஏராரும் அப்பிள்ளை அப்புள்ளார் ப்ரதிவாதி அண்ணனென்னும்
பேரார்ந்ததிக்கயம் சூழ்வர யோகியைச்சிந்தியுமே!!

## <u>ஸ்ரீமத் வானமாமலை ஜீயர் மணவாள மாமுனிகள் விஷயமாக அருளியுள்ள வாழித் திருநாள் பாசுரம்</u>

செந்தமிழ் வேதியர் சிந்தைதெளிந்து சிறந்து மகிழ்ந்திடுநாள்
சீருலகாரியர் செய்தருள் நற்கலை தேசு பொலிந்திடுநாள்
மந்த மதிப்புவி மானிடர் தங்களை வானிலுயர்த்திடுநாள்
மாசறு ஞானியர் சேரேதிராசர் தம் வாழ்வு முளைத்திடுநாள்
கந்தமலர்ப்பொழில்சூழ் குருகாதிபர்கலைகள் விளங்கிடுநாள்
காரமர்மேனியரங்க நகர்க்கிறை கண்கள் களித்திடுநாள்
அந்தமில் சீர் மணவாள மாமுனிப்பரன் அவதாரம் செய்திடுநாள்
அழகு திகழ்ந்திடு ஐப்பசியில் திருமூலம் எமதெனுநாளே